Q2:38 2N29C

உ

# சிவாய மலைக் கோயில் வரலாறு

திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் ஹைஸ்கூல் முன்னைத்
தமிழ் ஆசிரியரும், சென்னை H. R. E. Board ஆதரவில்
பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று,

சிவாயமலை தேவஸ்தானம் நிர்வாக அதிகாரி

திரு. V. கருப்பண்ண பிள்ளை அவர்கள்

**தர்மகர்த்தா :**

திரு. C. K. R. இராமலிங்கம் செட்டியார் அவர்கள்

ஆகியோரால் வெளியிடப்பெற்றது.


---

**தேவஸ்தான வெளியீடு**

உரிமை செய்யப்பெற்றது. 1950 [விலை 4 அணா.

112904

17 AUG 1930




சிவாய மலைக் கோயில்

# முன்னுரை

தெய்வ நினைப்பை உண்டாக்கும் இடங்களாகவும், பொருள் சேமிப்புக்கு உரிய இடங்கள் போல அருள் சேமிப்புக்கு உறைவிடங்களாகவும் ஆன்றோர்கள் அமைத்த திருக்கோயில்கள் விளங்குகின்றன. தென்னாட்டில் உள்ள தேவாரப்பதிகம்பெற்ற திருப்பதிகளில் சிவாய மலைக்கோயில் ஒன்று. இது திருச்சி ஜில்லா குழித்தலை தாலூகாவில் காவிரிக்குத் தென்கரையில் உள்ளது. கோயிலைத் தரிசிக்கவருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிவது நலம். சென்னை அறநிலையப்பாதுகாப்புக் கழகத்தார் (Hindu Religious Endowments Board) அனுப்பிய சுற்றறிக்கையின்படி, இவ்வரலாறு திருச்சி தமிழ் ஆசிரியர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால், வாட்போக்கிப் புராணத்தைத் தழுவியும், பிற நூல்களைப் பின்பற்றியும் சுருக்கமாக எழுதப்பெற்றுள்ளது. கல்வெட்டுச் செய்திகள், இக்கோயிலின் பழம்பெருமைகளைத் தெரிவிக்கின்றன. இத்தலத்துக்குரிய பாடல்களும் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து வாட்போக்கிநாதரின் திருவருளைப்பெறுக.

சிவாயம் | V. கருப்பண்ண பிள்ளை,
28—5—50. | நிர்வாக அதிகாரி.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் ... ... ... ... | 5 |
| 2. | கோயிலும் இருப்பிடமும் ... ... ... | 5 |
| 3. | தலத்தின் வேறு பெயர்கள் ... ... | 6 |
| 4. | கோயிலின் அமைப்பு ... ... ... | 7 |
| 5. | மூர்த்திகளின் பெயர்கள் ... ... ... | 9 |
| 6. | தீர்த்தங்கள் ... ... ... ... | 9 |
| 7. | தலப்பெருமைகள் ... ... ... | 10 |
| 8. | வழிபட்டோர் ... ... ... ... | 11 |
| 9. | திருப்பணிகள் ... ... ... | 12 |
| 10. | சிற்பச்சிறப்புக்கள் ... ... ... | 12 |
| 11. | தினப்பூஜையும் திருவிழாக்களும் ... ... | 13 |
| 12. | பிறகோயில்கள் ... ... ... | 14 |
| 13. | வருமானமும் சொத்துக்களும் ... ... | 15 |
| 14. | நிர்வாகம் ... ... ... ... | 15 |
| 15. | புராண வரலாறுகள் ... ... ... | 15 |
| 16. | கல்வெட்டுக்கள் ... ... ... | 19 |
| 17. | இலக்கியப் பாடல்கள் ... ... ... | 21 |

உ

# சிவாய மலைக் கோயில் வரலாறு

---

## 1. தோற்றுவாய்

ஆதியந்தங்கடந்த பரம்பொருளும், எவ்வுயிர்க்கும் தலைவனுமாகிய இறைவன், உலகத்திலுள்ள உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தன் மேலான அருவ நிலையி லிருந்து இறங்கி இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல இடங்களில் உருவத்திருமேனிகொண்டு எழுந்தருளி யிருந்து அருள் செய்து வருகின்றான். அத்தகைய சிறப் பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவதுபோலவும், சூரியன் எங்கும் பரவி இருந் தாலும் பளிங்குக்கல்லின் மூலமே கிரணங்கள் எளிதில் வெளிப்படுவதுபோலவும், இறைவன் எங்கும் வியாபித் திருந்தபோதிலும், ஆன்றோர்கள் அமைத்த அருள் மிகுந்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே" (சிவஞானசித்தியார்). 'மக்கட் பிறப்புபெறலரிது' என்ற படி பெறுதற்கரிய மக்கட் பிறப்பை வாய்ப்பாகப் பெற்ற மாந்தர் அனைவரும் பசுபதியாகிய பிரமனை அன்பினால் வழி பட்டு அவன் வகுத்த நன்னெறியில் ஒழுகி அவனருளைப் பெற முயலுதல் தலையாய கடமையாகும்.

## 2. கோயிலும் இருப்பிடமும்

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் எழுந் தருளியுள்ள கோயில்கள் பலவாகும். அவைகளுள் சிவ

ஞர் உறையும் சிவன் கோயில்களும், திருமால் குடிகொண்ட வைணவ ஆலயங்களும், முருகன் தங்கியுள்ள கோயில் களும் உள்ளன. அவைகளுள் சைவசமயத் தலைவர்களால் தேவாரப் பதிகம் பாடப்பெற்ற 274 திருக்கோயில்கள் உள்ளன. இவைகளையல்லாமல் ஊர்ப்பெயர் மட்டும் குறிக் கப்பெற்ற வைப்புத் தலங்களும், அறிஞர்களால் புராணம் பாடப்பெற்ற புராணத் தலங்களும், பிற அன்பர்களால் அவ்வப்போது கட்டப்பெற்ற அபிமானத் தலங்களும் உள்ளன. இவ்வாறு ஏற்பட்ட பல தலங்களுள், தேவாரம் பெறப்பட்ட 274 கோயில்களுள், வாட்போக்கி என்னும் பெயரைக்கொண்ட சிவாயமலைக் கோயில் ஒன்று உள்ளது. இது திருச்சிராப்பள்ளி ஜில்லா—குழித்தலை தாலூகாவில் காவிரி நதிக்குத் தென்கரையில் இனும் சத்தியமங்கலத் தைச் சேர்ந்ததாய், குழித்தலையிலிருந்து மணப்பாரைக்குச் செல்லும் சாலையில் 5-வது மைலில் உள்ளது. குழித்தலை புகைவண்டி நிலையத்திலிருந்து மோட்டார் Bus மூலமாக வும், தனி வண்டிகள் மூலமாகவும் இவ்வூரை அடையலாம். இவ்வூரில் குறிப்பிட்ட சமூகத்தார்க்குரிய தனிப்பட்ட சத்திரங்கள் உள்ளன. ஜனத்தொகை சுமார் 3000. இவ் வூரில் ஜில்லா போர்டைச் சேர்ந்த கீழ்த்தர ஆரம்பப் பாட சாலை உள்ளது. வாரந்தோறும் சனிக்கிழமைகளில் சந்தை கூடும். இவ்வூர் நடுவில் உள்ள செங்குத்தான மலை, சுற்றி யுள்ள சுமார் 20 மைல் வட்டாரம் வரையில் தன் தோற் றத்தைக் காட்டிக்கொண்டு நிற்கிறது. இவ்வூரில் மலை கண்ட வேளாளர்—பன்னிரண்டாஞ் செட்டியார் என்னும் இருவகுப்பினர் உள்ளனர். இவ்வூருக்குத் தெற்கில் சுமார் 1½ மைல் தூரத்தில் சிவாயம் என்னும் ஊரில் ஓர் பெரிய சிவன் கோயில் உள்ளது. அதன் விவரம் தனியே காட்டப் பட்டுள்ளது.

## 3. தலத்தின் வேறு பெயர்கள்

இம்மலைக்கு சிவாயமலை, இரத்தினகிரி, ரத்தினசலம், ஐயர்மலை, மணிகிரி, வாள்போக்கி, முதலிய பெயர்கள்

வழங்குகின்றன. பிரணவப் பொருளாகிய ஓம் என்னும் எழுத்தைப்போல் படிகளும் பிரகாரங்களும் அமைந்திருப்பதாலும், சிவமந்திரமாகிய ஐந்தெழுத்தின் வடிவாய் அமைந்திருப்பதாலும் சிவாயமலை என்றும், நவரத்தினங்களில் மாணிக்கம்போன்று விளங்குவதாலும், ஆரிய மன்னனுக்கு இரத்தினம் கொடுத்த காரணத்தாலும் இரத்தினகிரி, ரத்தினசலம், மணிகிரி, முதலிய பெயர்களும், யாவர்க்கும் தலைவனாகிய பெருமான் வீற்றிருக்கும் காரணத்தால் ஐயர் மலை என்றும், ஆரிய மன்னன் பெருமானது முடியில் வாளை வீசித் தழும்பு உண்டாக்கிய காரணத்தால் வாள்போக்கி என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. கல்வெட்டுக்களில் திருமாணிக்கமலை என்று காணப்படுகிறது. (பழனிமலைக்குப் பக்கத்தில் உள்ள ஐவர்மலை என்பது இதனினும் வேறானது என்பது அறியத்தக்கது.)

## 4. கோயிலின் அமைப்பு

இரத்தினகிரி (The Ruby Hill) என்னும் இம்மலை ஊரில் நடுவில் செங்குத்தாய் அமைந்துள்ளது. சுமார் 1178 அடிகள் உயரமுடையதாய் சுமார் 1000 படிகளைக் கொண்டுள்ளது. அடிவாரத்தில் ஓர் பெரிய மண்டபம் உண்டு. அதில் கிழக்கு நோக்கிய வைரப்பெருமாள் சந்நிதியும், வடக்கு நோக்கிய கருப்பண்ணசுவாமி சந்நிதியும் உள்ளன. அங்கிருந்து படிகள் மேல்நோக்கிச் செல்கின்றன. சிறிது தூரம் சென்றால் பொன்னிடும் பாறை என்ற இடம் உள்ளது. இவ்விடத்தில் பெருமான் சுந்தரர்க்குப் பொன் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இடைவழியில் விநாயகர் கோயிலும், சப்த கன்னியர்—எழு பெண்கள் கோயிலும் உள்ளன. சப்த கன்னியர் இருக்கும் இடம் ஓர் பெரிய பாறை இருதுண்டாக்கப்பட்டு குகைபோல் காணப்படுகின்றது. அதற்குப் பக்கத்தில் ஓர் மண்டபம் உள்ளது. இதில் வசந்த காலத்தில் பெருமானை எழுந்தருளச் செய்து ஊஞ்சல் விழா நடத்தப்படுகிறது. மேலே செல்லச்செல்ல படிகள் வளைவாய் அமைக்கப்பட்டுள்ளன.

படிக்கட்டுகளின் இடையில் அங்கங்கே பல மரங்கள் நிழலைத் தருகின்றன. மலை ஏறுபவர்கள் அந்த மர நிழல்களில் தங்கிச் செல்வார்கள். ஆங்காங்கு பல நீர்ச்சுனைகள் உள் ளன. பல படிகளைக் கடந்து சென்றால் முன்னே காணப் படுவது அம்மன் கோயில். இது கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே ஒரு பிரகாரம் உள்ளது. முன்னே உள்ள மண்ட பத்தில் இருந்து நோக்கினால் ஆகாய விமானத்தில் இருந்து பார்ப்பதுபோல் சுற்றுப்புறங்கள் அழகான காட்சியளிக் கும். உடற்பிணியைப் போக்கத்தக்க மருந்துபோன்ற மந்தமாருதம்—இனிய தென்றற்காற்று வீசும். வெய்யோ னின் வெப்பம் தோன்றாது. இவ்விடத்திலும் மலையின் பிற இடங்களிலும் குரங்கினங்கள் கூட்டங்கூட்டமாக வசிக்கும். அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் வேப்பமரம் ஒன்று உண்டு. இதுதான் தலவிருட்சம். இன்னும் சற்று மேலே சென்றால் வருகின்றவர்களை வரவேற்பதுபோல் தக்ஷிணாமூர்த்தி சந்நிதி உள்ளது. அதன் வழியே உள் சென்றால் சுவாமி சந்நிதி மேற்கு நோக்கி யிருப்பதைக் காணலாம். சுவாமி சந்நிதிக்குக் கீழே ஒரு பிரகாரமும், மேலே ஒரு பிரகாரமும் சங்குச் சுழிபோல் உள்ளன. கீழ்ப் பிரகாரத்தில் அறுபத்துமூவர் சந்நிதியும், மேல் பிரகாரத்தில் வைரப்பெருமாள், விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர், ஆரிய ராசன், நவக்கிரகம் முதலிய சந்நிதிகளும் உள்ளன. மலையின்மேல் ஓர் மணி மண்டபம் உள்ளது. பூஜை நேரங்களில் மணி அடிக்கப்படுகிறது. சுவாமி சந்நிதிக்கு மேற்கில் ஓர் சிறிய ஜன்னல் 9 துவாரங்களைக் கொண்டுள்ளது. அதன் வழியே காற்று பீறிட்டுக் கொண்டு வருவதைக் காணலாம். மகாமண்டபத் தூண் களில் சில சிலைகள் காணப்படுகின்றன. இம்மண்டபங் களைக் கட்டுவித்தவர்களாயிருக்கலாம். மண்டபத்தின்மேல் விட்டத்தில் மீன் சிலைகள் தீட்டப்பட்டுள்ளன. பாண்டிய மன்னர்களின் அடையாளமாயிருக்கலாம். மூலத்தானத் திற்கு உள்ளே பெருமான் லிங்க உருவத்தில் காட்சியளிக் கின்றார். லிங்கம் என்பது அருவமும் உருவமும் கலந்த அடையாளம். ஆரிய மன்னன் வாளை வீசியதால் உண்டான

தழும்பு தெரியும்படி லிங்கத்தின் முடியில் அடையாளமிருப்பதைக் காணலாம்.

## 5. மூர்த்திகளின் பெயர்கள்

இம்மலையில் உள்ள பெருமானுக்கு இரத்தினகிரீசுவரர், வாட்போக்கிநாதர், இராசலிங்கம், முடித்தழும்பர், மலைக்கொழுந்தீசர், சொக்கர் முதலிய பெயர்கள் வழங்குகின்றன. இரத்தினகிரியில் எழுந்தருளியிருப்பதால் இரத்தின கிரீசுவரர் (The Lord of the Ruby Hill) என்றும், ஆரிய மன்னன் வாளை வீசியதால் வாட்போக்கிநாதர் என்றும், ஆரிய ராசனால் பூஜிக்கப்பெற்றதால் இராசலிங்கர் என்றும், பெருமானது முடியில் தழும்பிருப்பதால் முடித்தழும்பர் என்றும, மலையினுடைய கொழுந்தே-லிங்கமாயிருப்பதால் மலைக்கொழுந்தீசர் என்றும், அழகு பொருந்தியிருப்பதால் சொக்கர் என்றும் பெயர்கள் ஏற்பட்டுள்ளன. அம்மனுக்கு சுரும்பார் குழலி என்ற பெயர் வழங்குகின்றது. வண்டுகள் மொய்க்கும்படியான கூந்தலை உடையவள் என்பது பொருள் கல்வெட்டுக்களில் பெருமானுக்கு திருமாணிக்கமலைஉடையநாயனுர், திருமாணிக்கமலை மகாதேவர் முதலிய பெயர்களும், அம்மனுக்கு ஹாலட்சேஸ்வரி என்னும் பெயரும் காணப்படுகின்றன.

## 6. தீர்த்தங்கள்

இத்தலத்திற்கு முக்கிய தீர்த்தம் காவிரி. தினந்தோறும் காவிரி நதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. இம்மலையைச் சுற்றிலும் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன. அவை சிவாய தீர்த்தம், இந்திர தீர்த்தம், வாயு தீர்த்தம், நாக தீர்த்தம், சூரிய தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், உரோமச தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், துர்க்கா தீர்த்தம் முதலியன. சிவாய தீர்த்தம் என்பது ஊரின் நடுவில் உள்ள தெப்பக்குளம் ஆகும். இது பஞ்சாட்சர தீர்த்தம் என்று சொல்லப்படுகிறது. இந்த நவ தீர்த்தங்களைக்

குறிக்கும் வகையில் சுவாமி சந்நிதிக்கு மேற்கே 9 துவாரங் களைக்கொண்ட ஜன்னல் ஏற்பட்டதுபோலும். மலையில் அங்கங்கே பல சுனைகளும் உள்ளன.

## 7. தலப்பெருமைகள்

இத்தலத்தின் பெருமைகள் மிகப் பலவாகும். மூல லிங்கம் சுயம்பு வடிவம். இத்தலத்தைப்பற்றி ஓர் பழ மொழி உண்டு. 'காலைக் கடம்பர் மத்தியானச் சொக்கர் அந்தித் திருவங்கிநாதர்' என்பது. அதாவது, காலையில் காவிரிக்கரையிலுள்ள கடம்பர்கோயில் பெருமானையும், மத்தியானப் பொழுதில் இரத்தினகிரியிலுள்ள சொக்கப்பெருமானையும், மாலையில் திருஈங்கோய் மலையி லுள்ள பெருமானையும் ஒரே நாளில் தரிசனம் செய்தால் விசேடம் என்று கூறுவர். இதனால் பெருமானுக்கு மத்தி யான சுந்தரர் என்னும் பெயரும் வழங்குகிறது. வடக்கே இருந்து வந்த ஆரிய மன்னனுக்கு இரத்தினமும், சுந்தரர்க் குப் பொன்னும் கொடுக்கப்பெற்ற இடம். ஆரிய மன்ன னுடைய பரம்பரையினர் என்று சொல்லப்படும் திரு மஞ்சனப் பண்டாரங்களாலும், பிராமணர்களாலும் தற் போதும் காவிரியிலிருந்து குடங்களில் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. ஆரிய மன்னன் வாளால் வெட்டியதால் உண்டான தழும்பு இறைவன் திருமுடியில் அமையப்பெற் றது. ஆரிய மன்னனின் உருவமும் பிரகாரத்தில் உள்ளது. அபிஷேகத்திற்காகக் கொண்டுவந்த பாற்குடத்தைக் கவிழ்த்த காகம் எரிக்கப்பெற்றது. குறிப்பிட்ட எல்லைக்கு மேல் காகம் பறப்பதில்லையாம். இதனால் 'காகம் அணுகா மலை' என்ற பெயரும் வழங்குகின்றது 'காகம் மேவுறில் கடுந்தழல் வீசிடு பறம்பு' என்றும் சொல்லப்படுகிறது. காக்கையின் செய்தியைப் புலப்படுத்த குடங்களில் காகத் தின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் நிகழ்ந்த போரில் மேருமலையினின்றும் வெளிவந்த துண்டு விழப்பெற்ற இடம் என்பர். சிவநேசச் செல்வர்களாகிய வணிகர்களிடமிருந்து பெருமான் பன்

னிரண்டாவது பங்கை வருவாயாகப்பெற்றது. காஞ்சீ புரத்திலிருந்து வந்த வைரப்பெருமாள் என்னும் பக்தன் தன் தலையைப் பலியிட்டு வழிபட்ட பெருமை உடையது. சுவாமி சந்நிதிப் பிரகாரத்திலும் அடிவாரத்திலும் வைரப் பெருமாளின் சந்நிதி உள்ளது. சுவாமிக்குத் தீப ஆரா தனை முடிந்தபின் வைரப்பெருமாளுக்கும் ஆராதனை நடை பெறுகிறது. இவருக்கு வீரவாகுதேவர் என்ற பெயரும் வழங்குகிறது. இவரே மலையைக் காத்துவருவதாகச் சொல்லப்படுகிறது. இம்மலையில் பன்னிரண்டு வருடங் களுக்கு ஒரு முறை இடி பூஜிப்பதாகச் சொல்லப்படுகிறது அகத்தியர் முதலியோரால் பூஜிக்கப்பெற்ற பெருமை உடை யது. இம்மலையிலுள்ள பலவகைப் பாம்புகளால் தீண்டப் பெற்றோர்க்கு விஷம் ஏறுவதில்லை என்று சொல்லப்படு கிறது. இயற்கையழகும் செயற்கை அழகும் செறிந்த இடம். மேலும் வெளியூர்களிலுள்ள பல வகுப்பினரும் தங்கள் குலதெய்வமாக வழிபடும் பெருமை உடையது. சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர மன்னர், ஹொய்சல மன்னர் ஆகியோரால் ஆதரிக்கப்பெற்றது. பல கல்வெட்டுச் செய்திகளை உடையது. திருநாவுக்கரசரால் தேவாரப் பதிகம் பாடப்பெற்றது. புராணம், கலம்பகம், உலா முதலிய பிரபந்தங்களை உடையது. இத்தலத்தில் கல்யாணச் சடங்குகளும் நடைபெறுகின்றன. கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளிலும், தைப்பூச நாளிலும் விசேட ஆராதனைகள் நடைபெறும். எனவே இம்மலையின் பெரு மைகள் மலைபோன்றனவாகும்.

## 8, வழிபட்டோர்

இத்தலத்துப் பெருமானை இந்திரன், சூரியன், வீர சேனன், ஆதிசேடன், துர்க்கை, அகத்தியர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளார்கள். அவர்களுடைய பெயர்களால் ஏற்பட்ட தீர்த்தங்களும் உள்ளன. ஆரிய மன்னன், வைரப்பெருமாள் வழிபட்டதற்கு அவர்களுடைய சிலைகளும் உள்ளன. சப்தகன்னியரும் வழிபட்டுள்ளனர்.

பிற்காலத்தில் திருநாவுக்கரசர், சுந்தரர், அருணகிரிநாதர் முதலியோர் பெருமானை வழிபட்டுப் பாடல்கள் பாடியுள்ளார்கள். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இடி பூஜிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆண்டுதோறும் சூரியன் மேடராசியில் (சித்திரையில்) இருக்கும் காலத்தில், வரும் பௌர்ணமியில், சூரியன் பிற்பகலில் தன் கிரணங்களால் பெருமானைப் பூஜிக்கின்றான். இக்காலத்திலும் பல அன்பர்கள் வெளியூர்களிலிருந்து வந்து பெருமானை வழிபட்டுச் செல்கின்றார்கள்.

## 9. திருப்பணிகள்

இத்தலத்தில் பல ஆண்டுகளுக்குமுன் சுமார் 1923 ல் கோயில் பழுது பார்க்கப்பட்டுத் திருப்பணி நடைபெற்றதாகத் தெரிகிறது. தற்போதைய நிலையிலும் கோயில் கட்டிடங்கள் திருப்பணி செய்யவேண்டிய நிலையில் உள்ளன. "புதிதுறப்பணிகள் வேறு புரிவதிற் பழய தொன்மை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியந் தான் எய்தும்" என்ற ஆன்றோர் வாக்குப்படி, புதிய ஆலயத்தை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிகுந்த புண்ணியத்தைத் தரும். ஆதலின் சிவநேசச் செல்வர்கள், கோயில் திருப்பணியில் வேண்டுவன செய்து பெருமான் திருவருளைப் பெறுவார்களாக.

## 10. சிற்பச்சிறப்புக்கள்

மலைக்குச்செல்லுதற்குரிய படிகளில் சில பாறையிலும் சில அடுக்காகவும் அமைக்கப்பட்டுள்ளன. சுவாமி சந்நிதிக்குமேலும் கீழும் உள்ள பிரகாரங்கள் சங்குச் சுழி போலவும், பிரணவம் போலவும் அமைந்துள்ளன. சுவாமி சந்நிதியின் மண்டபத்தில், பழங்காலத்துச் செய்யப்பட்ட உலோகத்தாலான இரண்டு பாவைகள், விளக்கு ஏந்திய வண்ணமாய் இருக்கின்றன. அவைகளில் ஒன்று சகம்

1726 ல் கோயிலுக்குத் தானம் செய்யப்பட்டதாய்த் தெரிகிறது. இந்தப்பாவைகள் அழகிய வேலைப்பாடுடன் விளங்குகின்றன. அக்காலத்து நாகரீகத்தை அறிவிக்கும் படியான பல அணிகளைக்கொண்டுள்ளன. சடையணிகள், காதணிகள், மூக்கணிகள், கழுத்தணிகள், ஆரங்கள், கைவளைகள், காலணிகள் முதலியன முற்காலத்திருந்த பழக்க வழக்கங்களைத் தெரிவிக்கின்றன. ஒரு பாவையின் காதுகளில் ஜிமிக்கி என்னும் காதணிகள், அசைத்தால் அசையும் தன்மையுடையதாய் அமைந்துள்ளன. தக்ஷிணா மூர்த்தியின் சிலை இனிய முகத்தோற்றத்துடன் அமைந்துள்ளது.

## 11. தினப்பூஜையும் திருவிழாக்களும்

இம்மலையில் கோயில் கொண்டிருக்கும் பெருமானுக்கு காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அபிஷேகங்கள் காவிரி நீராலேயே செய்யப்படுகின்றன. காலைப்பூஜை பகல் 11 மணிக்கும், உச்சிப்பூஜை 2 மணிக்கும், மாலைப்பூஜை மாலை 6 மணிக்கும் நடைபெறுகின்றன. இவைகளுக்காகத் தனித்தனியே கட்டளைகள் ஏற்பட்டுள்ளன. காலை சந்திக் கட்டளை பன்னிரண்டாம் செட்டியார்களாலும், உச்சிக் காலக் கட்டளை வீரப்பூர் ஜமீன்தாராலும், விஸ்வகர்மாக்களாலும், மாலைப்பூஜை தேவஸ்தானத்தாராலும் நடத்தப் படுகின்றன.

திருவிழாக்கள் :—ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் மலைப்பெருமானுக்குப் பெரு விழா நடைபெறும். மலை மேல் உள்ள உற்சவ மூர்த்தி கீழே வந்து வாகனங்களில் காட்சிதந்து. கடைசி நாளில் தேரோட்டம் நிகழும். சங்கிலி கொண்டு தேர் இழுக்கப்படுகிறது. தைப்பூச நாளில் சுவாமி கடம்பர் கோயில் துறைக்குச்சென்று, கடம்பர்கோயில், ராஜேந்திரம், வெட்டுவாய்த்துறை, கருப்பத்தூர், திருஈங்கோய்மலை, முசிரி, வெள்ளூர் முதலிய

தலங்களில் இருந்து வந்துள்ள மூர்த்திகளுடன் தங்கி யிருந்து மறுநாள் புறப்பட்டு ஊர்வந்துசேரும். பங்குனி உத்திர நாளில் குழித்தலையில் உள்ள தெப்பக்குளத்தில் தெப்ப விழா நடைபெறும். அன்றையதினம் காலையில் சுவாமி புறப்பட்டுப்போய் இரவில் தெப்பத்தில் காட்சி கொடுத்து மறுநாள் திரும்பும். இவைகளையல்லாமல் மாதாந்திர விழாக்களும் அவ்வப்போது நடைபெறுவ துண்டு.

## 12. பிறகோயில்கள்—சிவாயம் கோயில்

ஐயர்மலைக்குத் தெற்கில் சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் உள்ள சிவாயம் என்னும் ஊரில் ஓர் பெரிய சிவன் கோயில் உள்ளது. நான்கு பக்கங்களிலும் பெரிய மதில்களையும், கீழ்புறம் பெரிய கோபுரத்தையும் கொண்டு விளங்கு கின்றது. ஐயர்மலையில் இருந்தபடியே இக்கோயிலைத் தரிசிக்கலாம். இதுவே பழமையான கோயில் என்று சொல்லப்படுகிறது. முற்காலத்தில் சிவபாதசேகரபுரம் என்னும் பெயரால் இவ்வூர் வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. கோயிலுக்குள்ளே 2 பிரகாரங்கள் உள்ளன. சுவாமி அம்மன் சந்நிதிகள் கிழக்கு நோக்கி உள்ளன. சுவாமிக்கு சிவபுரீஸ்வரர் என்றும், அம்மனுக்கு பெரிய நாயகி என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. கோயில் சுவர்களில் பல கல்வெட்டுக்கள் உள்ளன.

இக்கோயிலில் உள்ள மூர்த்திகளுக்கு காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

ஆண்டுதோறும் நிகழும் திருவிழாக்களில் பல ஐயர் மலையில் நடைபெறுகின்றன. சிவாயக்கோயிலில் மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளைக்குறித்துப் பத்து நாட்கள் வரை விழா நடைபெறும். இக்கோயிலும் சென்னை எண்டோமெண்ட் போர்டின் நிர்வாகத்தில் உள்ளது. ஐயர்

மலைக்குரிய நிர்வாகத் தலைவர்களே இக்கோயிலின் காரியங்களையும் கவனித்து வருகிறார்கள்.

## 13. வருமானமும் சொத்துக்களும்

ஆண்டுதோறும், நன்செய், புன்செய், குத்தகை, காணிக்கை, உண்டியல், பிறவகைகள் மூலமாகச் சுமார் ரூ. 25000 வருமானம் கிடைக்கின்றன. சுமார் ரூ. 20000 மதிப்புள்ள திருவாபரணங்கள் உள்ளன.

## 14. நிர்வாகம்

இத்தலத்தின் நிர்வாகம் திருச்சி ஜில்லா தேவஸ்தான கமிட்டியாரின் மேற்பார்வையில் இருந்து வந்தது. பிறகு 1939 ல் ஸ்கீம் ஏற்பட்டு அதிலிருந்து சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தின் (Hindu Religious Endowments Board) நிர்வாகத்தில் இருந்து வருகிறது. மேற்படி போர்டாரால் நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரியும் தர்மகர்த்தாக்களும் கோயிலின் காரியங்களைக் கண்காணித்து வருகிறார்கள்.

112904

## 15. புராண வரலாறுகள்

இத்தலத்தின் மகிமைகளை இரத்தினசலமான்மியம், திருவாட்போக்கிப் புராணம் என்னும் இருநூல்கள் விரிவாகக் கூறும். இரத்தினசலமான்மியம் யாழ்ப்பாணம், தாமோதரம் பிள்ளையால் உரைநடையில் ஆக்கப்பெற்றது. வாட்போக்கிப்புராணம், முதல் 10 சருக்கங்கள் திருவாரூர் வைத்தியநாத தேசிகராலும், மற்ற சருக்கங்கள் வேறு மூவராலும் செய்யுளில் இயற்றப்பெற்றது. இதில் புராண வசனமும் சேர்ந்துள்ளது. இந்நூல்களில் பலவரலாறுகள் கூறப்பட்டுள்ளன. அவைகளாவன :- தலவிசேடம், இந்திரன்—வாயுதேவன் — ஆதிசேடன் — ஆதித்தன் — அகத்தியன்–வீரசேனன்–துர்க்கை முதலியோர் பூசித்தது,

மாணிக்கமலைச்சிறப்பு, இடிபூசித்தது, உரோமசர் வழிபட்டது, வாட்போக்கி வரலாறு, ஆரியராசன் வழி பட்டது, சிற்றுயர் அருள்பெற்றது, வயிரப்பெருமாள் மலைக்காவல் பெற்றது, பொன்னிடும் பாறை வரலாறு முதலியன விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. இவ்வரலாறு களை உள்ளடக்கிக்கூறும் புராணப்பாடல்கள் வருமாறு :—

"நலங்கொளா ரணியமென்னு நைமிசமானவாறும்
இலங்குமாணிக்கக்குன்றம் இருநிலத்தடைந்தவாறும்
துலங்குமக் குன்றமேவும் தொல்புகழ்ச்சிறப்பினோடும்
சலங்கொளும் வாயுசேடன் சார்ந்தருச்சித்தவாறும்

இந்திரன் பணிந்தவாறும் இடியருச்சித்தவாறும்
செந்தமிழ் முனிவன் பூசைச்சிறப்பொடுரோமசப்பேர்
அந்தமில் முனிவன் பூசித்தரனருள்பெற்றவாறும்
சந்திரகாசங்கொண்டு தடவரை பிளந்தவாறும்"

இவ்வரலாறுகளில் சில பின்னே சுருக்கிக்காட்டப் பட்டுள்ளன.

1. மாணிக்க மலையின் தோற்றம் :—

ஒரு காலத்தில் வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும் பெரும்போர் ஏற்பட்டுத் தம் தம் வலிமையைக் காட்ட முயன்றனர். அப்போது வாயுதேவனால் மேரு மலையி லிருந்து ஐந்து சிகரங்கள் பெயர்க்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் வந்து அமைந்தன. அந்த ஐந்து இடங்களும் ஐந்து சிவஸ்தலங்களாயின. அவைகளில் ஒன்று இந்த மாணிக்கமலை என்னும் இரத்தினகிரி. மற்றவை பாண்டி நாட்டில் தாமிரபரணிக்கரையில் உள்ள நீலாசலமும், காவிரி நதிக்கு மேல்கரையில் உள்ள சுவேதாசலமும், காவிரி நதிக்கு வடகரையில் உள்ள மரகதாசலம் என்னும் திருஈங்கோய்மலையும், கந்தநதிக்கரையில் குண்டிகாசலத் தொடர்பில் உள்ள வன்னிகர்ப்பம் என்ற தலமும் ஆகும்.

## 2. ஆரிய மன்னன் வழிபட்டது.

பல வளங்களும் நிறைந்த ஆரிய நாட்டில் மங்கலமா நகர் என்னும் ஊரில் ஆரிய அரசன் என்னும் பெயர் கொண்ட மன்னன் நீதிமுறை தவருமல் செங்கோல் செலுத்தி அரசாண்டு வந்தான். சிவபெருமானிடத்தும், சிவனடியார்களிடத்தும் மிகுந்த பக்தி கொண்டவன். சிவ பெருமான் எழுந்தருளிய தலங்களில் விதிப்படி பூஜைகள் நிகழவும், திருவிழாக்கள் நடைபெறவும் வேண்டியபொருள் களைச் செலவிட்டு வந்தான். சிவனடியார்களையும் அன் புடன் உபசரித்து ஆதரித்து வந்தான்.

ஒருநாள் அவன் தரித்து வந்த மாணிக்கமுடி எதிர் பாராதபடி மறைந்துவிட்டது. அரசன் மிக வருத்தமுற்ற வனாய் தன்னைச்சார்ந்த யாவரையும் விசாரித்தும் பெற முடியவில்லை. அப்போது பெருமான் ஓர் மறையவனைப் போல் தோன்றி அரசனிடம் 'உனது திருமுடி இரத்தின கிரியில் உள்ளது. போய்ப்பெற்றுக்கொள்' என்று சொல்லி மறைந்து சென்றான். ஆரிய அரசன் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு இரத்தினகிரிக்கு வந்து சேர்ந்தான். பெருமானைப் பலவாறு துதித்து நின்றான். பெருமான் மீண்டும் ஓர் வேதியன்போல் தோன்றி, ஓர் கொப்பரை யைக்காட்டி 'இந்தக்கொப்பரையில் காவிரி நீரைக்கொண்டு நிரப்பினல் உனது திருமுடி கிடைக்கும்' என்று கூறவே, அரசனும் பல குடங்களைக்கொண்டு காவிரி நீரைக் கொப்பரையில் கொட்டியும், கொப்பரை நிறையாமல் நீர் கசிவதைக்கண்டு கோபங்கொண்டு தன் வாளால் வேதியன் முடியில் வெட்டவே, அவ்வெட்டு சிவலிங்கத்தின் முடியில் விழுந்து தழும்பு உண்டாக்கியது. வேதியனும் மறைந் தான். அரசன் தான் செய்த தவருன செயலை மன்னிக்க வேண்டிப் பிரார்த்தித்தான். பெருமானும் பல வரங்களை அருளினன். அரசனும் தன் நகருக்குச்சென்று பலகாலம் அரசாண்டு முத்தி அடைந்தான். அரசனுடைய வாளைப் போக்கித் தன் முடியில் வாளின் தழும்பு ஏற்படச் செய்த

தால் வாட்போக்கி என்று பெருமானுக்கும், தலத்துக்கும் பெயர் உண்டாயிற்று. ஆரிய ராஜனால் வழிபடப் பெற்ற தால் ராஜலிங்கம் என்னும் பெயர் ஏற்பட்டது. அவனால் நீர் நிரப்பப்பட்ட கொப்பரையே இன்னும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆரியமன்னனுடைய பரம்பரையினரே தற்போதும் காவிரியிலிருந்து குடங்களில் நீர் கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இம்மன்னனுடைய சிலை சுவாமிகோயில் பிரகாரத்தில் வடபுறத்தில் உள்ளது.

3. வைரப்பெருமாள் வரலாறு:—

தொண்டை நாட்டில் சிறந்து விளங்கும் காஞ்சிமா நகரத்தில் ஆயர்குலத்தில் ஓர் சிவபக்தர் வாழ்ந்து வந்தார். சிவபெருமானிடத்தும், அடியவரிடத்தும் மிகுந்த அன்பு கொண்டு ஆதரித்து வந்தார். இவருக்கு ஓர் தங்கை இருந்தார். அந்த அம்மையார் தமக்குக் குழந்தை இல்லாமல் கவலை கொண்டிருந்தார். தம் மனத்துயரத்தைத் தமையனிடம் தெரிவிக்க தமையனாராகிய பக்தர் பல தலங்களுக்கும் சென்று தரிசித்துக் கடைசியாக இரத்தின கிரி என்னும் இத்தலத்துக்கு வந்து பெருமானிடம் தனது தங்கையின் கவலையைத் தீர்த்தருளவேண்டிப் பிரார்த்தித்தார். தம் தலையைத் தருவதாக வேண்டிக்கொண்டார். பெருமான் திருவருளால் தங்கை ஓர் புதல்வனைப் பெற்றெடுத்தாள். தங்கையும் தமையனும் மகிழ்ந்தார்கள். தமையனர் தாம் பிரதிக்ஞை செய்திருந்தபடி தம் தலையைப் பலியாகக்கொடுத்தார். (அக்காலத்தில் தலைப்பலி கொடுக்கும் வழக்கம் இருந்ததுபோலும்.) இத்தகைய வீரச் செயலைச் செய்ததால் அவருக்கு வயிரப்பெருமாள் என்ற பெயர் ஏற்பட்டது. இவருக்கு வீரவாகுதேவர் என்ற பெயரும் வழங்குகின்றது. இவரே மலையைப் பாதுகாத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இவருடைய சிலை சுவாமி சந்நிதியிலும், அடிவாரத்திலும் உள்ளது. சுவாமிக்குத் தீபாராதனை ஆனபின் இவருக்கும் உடனே ஆராதனை நடைபெறுகிறது.

**4.** பன்னிரண்டாம் பங்கு பெற்றது :—

ஒரு காலத்தில் சில வணிகர்கள் இத்தலத்துக்கு வந்து தங்கள் செல்வங்களை 11 பங்குகளாகப் பிரித்தார்கள். பிரிக்கும்போது 12 பங்குகள் காணப்பட்டதாம். பல முறை பிரித்தும் அவ்வாறே காணப்பட்டது. அவர்கள் ஆச்சரியப்பட்டு நின்றபோது பெருமான் மனித உருவில் தோன்றித் தனக்கும் ஒரு பங்கு தரவேண்டி வற்புறுத்தினான். அவ்வாறே தமது வருவாயில் ஒரு பங்கைப் பெருமானுக்கு அளித்து வருகிறார்கள். அது முதல் வணிகர்கள் பன்னிரண்டாஞ்செட்டியார்கள் என்று வழங்கப்படுகிறார்கள். இச்செய்தியை வாட்போக்கிக் கலம்பகத்திற் காணலாம். பிறவரலாறுகள் தனியே உள்ள புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

## 16. கல்வெட்டுக்கள்

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்களில் இரத்தினகிரியில் 50 கல்வெட்டுக்களும், சிவாயம் கோயிலில் 7 கல்வெட்டுக்களும் உள்ளன இவை தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதிகளில் 1914 ம் ஆண்டில் 144 முதல் 191 எண்களாகவும், 1892 ல் 102, 103 எண்களாகவும், சிவாயம் கோயிலில் உள்ளவை 1913 ம் ஆண்டில் 44 முதல் 50 வரையில் உள்ள எண்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை சுவாமி அம்மன் கோயில்களில் உள்ள சுற்றுச் சுவர்களிலும், மலையின் பாறைகளிலும் வெட்டப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களால் பழமையான புல செய்திகள் தெரிய வருகின்றன.

கல்வெட்டுச் செய்திகளின் சுருக்கம் :—

இம்மலை மாணிக்கமலை — வாட்போக்கி என்றும், சுவாமிக்கு குன்றம் உடையார், திருமாணிக்கமலை உடைய தம்பிரானார், மகாதேவர், நாயனார், வாட்போக்கி மகாதேவர்

என்றும், அம்மனுக்கு ஹாலட்சேஸ்வரி என்றும், இவ்வூர்ப் பகுதி தென்கரை ராஜகம்பீரவளநாட்டைச் சேர்ந்த குறு நகர் நாடென்றும், அடுத்துள்ள குழித்தலை, குழித்தண்டலை என்றும், பெயர்கள் வழங்கி வந்திருப்பனவாகத் தெரிய வருகிறது. கி. பி. 1783 ல் மலைமேல் உள்ள கோயில் மண்டபங்கள் கட்டப்பட்டதும், 13-வது நூற்றாண்டில் ஹொய்சல மன்னனான வீரசோமேஸ்வரனது ஆட்சியில் இந்நாட்டின் பெரும்பகுதி இருந்து வந்ததும், புலனு கின்றன. இவன் பெயரால் சோமேஸ்வரன்பேட்டை (சோமரசம்பேட்டை) என்ற ஊரும் இருப்பதை அறிய லாம். சுவாமி சந்நிதிக்குப் போகும் 3 வரிசைப் படிக் கட்டுகள் ராசிங்கதேவன் என்பவனால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. சிவபாதசேகரபுரம் என்னும் ஊரில் இருந்த வர்கள், இக்கோயிலுக்குப் பல தானங்களைச் செய்துள்ளார் கள். ராஜராஜ சோழதேவன், ஜடாவர்மன் சுந்தரபாண்டி யன், விஜய நகர மன்னர்களான சதாசிவமகாராயர், வீர நரசிம்ம புஜபலமகாராயர், விருப்பண்ண உடையார், கோனேரிமேக்கொண்டான் (கோன் – நேர் – இன்மை – கொண்டான்), குலோத்துங்கச் சோழர்கள், விக்கிரம சோழன், ஹொய்சல மன்னன் வீராமநாத தேவன் முதலான அரசர்களின் ஆட்சிக்காலங்களில் கோயில் பூஜைக்கும், விளக்கிடுவதற்கும், காவிரியிலிருந்து குடங் களில் நீர்கொண்டுவருவதற்கும், திருவிழாக்கள் நடத்து வதற்கும், வெற்றிலைபாக்கு நைவேத்தியத்திற்கும், நிலங் களும், பொற் காசுகளும், பணமும், துலையுறை செம் பொன்னும் தனித்தனியே தானம் செய்யப்பட்டுள்ளன. 161 எண் கல்வெட்டுப்படி சிற்றம்பருடையான் என்பவனால் தக்ஷிணாமூர்த்தி சிலையும் படிகளும் அமைக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு அரசர்களின் காலங்களில் வெவ்வேறு திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. கிராம சபையாரால் ஊராட்சி நடைபெற்று வந்தது. குறிப்பிட்டுள்ள தானச் செயல்களுக்குத் தேதிகள் காட்டப்பட்டிருக்கின்றன. கி. பி. 1109, 1198, 1211, 1253, 1262, 1267, 1390, 1506, இந்த ஆண்டுகளில் கோயிலுக்கு ஏற்பட்ட தான

தருமங்கள், அறச்செயல்கள் ஆகியவைகளைப்பற்றிச் சில கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. பேர்வரி, சில்வரி, வெட்டிவேதினை, குலைதாம்பு, செய்நீர் வெட்டி முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. காசு, ஆனைஅச்சு, துலை உறைசெம்பொன் முதலிய பெயர்கள் அக்காலத்து நாணயங்களைத் தெரிவிக்கின்றன. கருங்கீழப்பள்ளி, எதிரிலி சோழநல்லூர், வீரசோழ சதுர்வேதிமங்கலம், சிவபாதசேகரபுரம், வல்லடமங்கலம், சாத்தமங்கலம், சோழபாண்டிபுரம் முதலிய ஊர்ப்பெயர்கள் சொல்லப்படு கின்றன. இவை போன்ற பல செய்திகள் காணப் படுகின்றன.

---

## 17. இலக்கியப் பாடல்கள்

### (1) திருநாவுக்கரசர் பாடிய திருவாட்போக்கி— திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

1. கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பாலகர்விருத் தர்பழை யாரெனர்
ஆல நீழல் அமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே.

2. விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்தபோது பயனிலை பாவிகாள்
அடுத்த கின்னரம் கேட்கும்வாட் போக்கியை
எடுத்தும் ஏத்தியும் இன்புறு மின்களே.

3. வந்திவ்வாறு வளைத்தெழு தூதுவர்
உந்தியோடி நரகத்திடாமுனம்
அந்தியின்னொளி தாங்கும் வாட்போக்கியார்
சிந்தியா எழு வார்வினை தீர்ப்பரே.

4. கூற்றம் வந்து குமைத்திடும் போதினுல்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே
ஆற்ற வும்மருள் செய்யும்வாட் போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீங்கவே.

5. மாறுகொண்டு வளைத்தெழு தூதுவர்
வேறு வேறு படுப்பதன் முன்னமே
ஆறு செஞ்சடை வைத்தவாட் போக்கியார்க்கு
ஊறி ஊறி உருகுமென் னுள்ளமே.

6. கானமோடிக் கடிதெழு தூதுவர்
தானமோடு தலைபிடியா முனம்
ஆனஞ்சாடி உகந்தவாட் போக்கியார்
ஊன மில்லவர்க் குண்மையில் நிற்பரே

7. பார்த்துப் பாசம் பிடித்தெழு தூதுவர்
கூர்த்தவேலால் குமைப்பதன் முன்னமே
ஆர்த்த கங்கை அடக்கும்வாட் போக்கியார்
கீர்த்தி மைகள் கிளர்ந்துரை மின்களே.

8. நாடிவந்து நமன்தமர் நல்லிருள்
கூடிவந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாடல் உகந்தவாட் போக்கியை
வாடியேத்த நம்வாட்டம் தவிருமே.

9. கட்டறுத்துக்கடிதெழு தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்படா முன்னமே
அட்ட மாமலர் சூடும்வாட் போக்கியார்க்கு
இட்ட மாகி இணையடியேத்துமே.

10. இரக்க முன்னறி யாதெழு தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன் முன்னமே
அரக்கனுக்கருள் செய்தவாட் போக்கியார்
காப்ப துங்கரப் பாரவர் தங்கட்கே.

திருச்சிற்றம்பலம்

## (2) திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகம்

பார்முழுதாய் விசும்பாகிப் பாதாளமாம்
பரம்பரனைச் சுரும்பமரும் குழலாள்பாகத்
தாரமுதாம் அணிதில்லைக் கூத்தன் தன்னை
வாட்போக்கி அம்மானை எம்மானென்று
வாரமதாம் அடியார்க்கு வாரமாகி
வஞ்சனைசெய்வார்க்கென்றும் வஞ்சனாகும்
சீரரசைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்திநெஞ்சே.

## (3) திருவாட்போக்கிப் புராணம்

திருவாரூர் வைத்தியநாத தேசிகர் முதலியோரால் செய்யுளில் செய்யப்பெற்றது. நைமிசச் சருக்கம் முதல் பொன்னிடும்பாறைச்சருக்கம் வரையில் 14 சருக்கங்களைக் கொண்டது. இனிய செந்தமிழ் நடையில் அமைந்துள்ளது.

### விநாயகர்

1. இருவினையும் விடமாயை யிடகல ஆணவத்தின்
விரிவுதரு வலிசாய விரைந்து சுழல் கறங்கேபோல்
வருபிறவிக் கோடையினுல் வாடாமலுயிர் தளிர்ப்பக்
கருணைதழை பொழியுமொரு கடாக்களிற்றை
வணங்குவாம்.

### முருகக் கடவுள்

2. பொன்னிருகை விரல்சேர்த்திப்புடைவீசி யிறுமாந்து
முன்னிருகை யானையொத்து மூர்க்கனுய்த் திரிந்துழலு
மென்னிரு கைத்தொழும் பேற்கு மிருசரண முளரி
யுடன்
பன்னிருகை படைத்தருளும் பாலகனைப் பரவுவாம்.

நந்திதேவர்

3. மருவந்த தவநீழல் வாசவனு மாலயனும்
வெருவந்து புடைவிலங்க விலக்கு திருப்பிரம் பேந்தி
ஒருவன் பின் எமையாள்வோன் ஒலக்க நடாத்தியருள்
அருணந்தி அடிக்கமலம் அகக்கமலத் திருத்துவாம்.

இரத்தினகிரீசுவரர்

4. சீர்தந்த நான்மறையின் சிரத்தொளியைச் சித்தாந்தத்
தெளிவையன்பால்
பார்தந்த இமயமலைப் பசுந்தேனைக் கலந்தவொரு
பாலை வேலைக்
கார்தந்த ஆலால முண்டுவிண்காத் தருள்கருணைக்
கடலை நாளும்
ஏர்தந்த வாட்போக்கி மாணிக்க மலைக்கொழுந்தை
இறைஞ்சி வாழ்வாம்.

சுரும்பார்குழலம்மை

5. அரும்பாருந் தனதடமு மங்கலநா ணணிந்தகண்டத்
தழகுந்தோடும்
கரும்பாரும் பசுந்தோளும் மதிமுகமும் கருணைபொழி
கமலக் கண்ணும்
இரும்பாரும் பொன்னுலகு மேத்தவடி யவர்
வாழ்த்த எதிர் நின்றாளும்
சுரும்பாரும் குழலுமையாள் துணையடித்தா மரை
முடிமேல் சூடி வாழ்வாம்.

திருஞானசம்பந்தர்

6. பொங்குபுன லிடுமேடு புனலோடு மோடாமல்
இங்கெவரு மதிசயிப்ப எதிரேறச் சமண்கையர்
துங்கமலி கழுவேறத் தொடர்ந்தவரை வாதில்வென்ற
சிங்கமறைக் குருளையிரு சேவடிசென் னியில்
வைப்பாம்.

திருநாவுக்கரசர்

7. வெற்பிணையா மடல்வேழம் வேகம்விடுத் தடிதாழ்த்தி
அற்புதமா மெனும்படிநீற் றறைமலர்ப்பூந் தடமாக்கிப்
பற்பலர்பார்த் தகங்குழையப் பல்பிணியார்த்
திட்டவொரு
கற்புணையாற் கடல்கடந்த கவிக்கரசைப் பரவுவாம்.

சுந்தரர்

8. அம்புயப்போ தமர்ந்தோனும் அலைகடல் வாய்த்
துயின்றோனும்
உம்பர்களியா வரும்பிறரும் உணர்வரிய திருவடிகள்
இம்பரிற்பா ரிடந்தோய இருமுறைநள்ளிரவினிடை
நம்பனைத்தூதென நடத்து நம்பியையன் புடன்
பணிவாம்.

மாணிக்கவாசகர்

9. கூடனெடுந் தெருவினிடைக்குறுநரியின்
குலமனைத்தும்
ஆடல் வயப் பரியாக்கி ஐங்கதியின் முறைநடப்பத்
தோட விழ்பூங் கொன்றைபுனை தோன்றல் மறைப்
பரியில் வரப்
பாடல்புரி வாதவூர்ப் பாவலனைப் பரவுவாம்.

அறுபத்துமூவர்

10. மறுவுற்ற புறச்சமய வழியனைத்தும் பிழையென்று
குறைவற்ற பேரன்பாற் குருலிங்க சங்கமத்தின்
உறுபத்தி நெறியெவர்க்கும் உணர்த்துதல்
செய்தெனையாண்ட
அறுபத்து மூவர்கள் பொன், அடிக்கமலம் முடிக்
கணிவாம்.

ஆரியராஜன்

11. சூரியரா யிரங்கோடி தோன்றியபோற் சுடர்
மணிக்காக்
காரியல்கண் டனைப்பொன்னிக் கடநீராயிரமாட்டப்
பூரியெனப் பாத்திரத்திற் பொசிவாசி தாமுனிந்த
ஆரியமன் னனைநாளும் அகக்கமலத் திருத்துவாம்.

வைரப்பெருமாள்

12. அற்றமில்காஞ் சியிற் பிறந்து ஆயர்குலத் தவதரித்துக்
குற்றமிலா வுடன்பிறந்தாள் குழவிபெறத் தலைபலியாய்
உற்றுதவி மாணிக்க வோங்கனற்பெம் மானருளைப்
பெற்றெமையாண் டருள் வயிரப்பெருமாளைப்
பரவுவாம்.

துதிப்பாடல்கள்

13. கடவாரண வுரியாய்மதி கதிராரழல் விழியாய்,
படநாகமொ டறு காறணி பழமாமறை முதல்வா
இடரானவை களைவாயெமை யினிதாளுடை யொருவா
மடமாதுமை யுடனுயமர் மணிமாமலை யிறைவா!

14. பொதியாசல முனிபாடிய புகழாப் வினையகழாய்
மதிசூடிய சடையாயிசை மறைபாடிய விடையாய்
முதிராவய துடையர்ச்சக முழுதாளுடை முதல்வா
கதியாய்மணி மலைமேவிய கருணாகர அருளாய்.

15. மலரம்புய வயனெஞ்சிர மறுகும்படி திருகிச்
சிலையங்கச னுடலம்படுதிறம் வெந்தழல் சொரிவாய்
கலகம்புரி தருமந்தக கயவன்பட முனிவாய்
மலைமங்கையொ டுயிருய்ந்திட மணிமென்சிலம்
புறைவாய்

16. அன்றினர் புர மொன்றிநீறெழ வாரழற்பொறி தூவிய
மன்றலார்தரு கொன்றைமாமலர் மாலைசூடிய வேணியாய்
தென்றலார்தரு பொங்கர்நீடுயர் சேணளாவொளி மாமணிக்
குன்றிலாருயிர் வாழமேவிய கோதிலாவரு ளாழியே.

## (4) அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

1. கயலைச் சருவிப் பிணையொத் தலர்பொற்
கமலத் தியல்மைக் கணினாலே
கடிபொய்ப் புயலைக் கருதிக் கறுவிக்
கதிர்விட் டெழுமைக் குழலாலே
நயபொற் கலசத் தினைவெற் பினைமிக்
குளநற் பெருசெப் பிணையாலே
நலமற் றறிவற் றுணர்வற் றனனற்
கதியெப் படியுற் றிடுவேனோ
புயனுற் றியல்மைக் கடலிற் புகுகொக்
கறமுற் சரமுய்த் தடலோடும்
பொருதிட் டமரர்க் குறுதுக் கமும்விட்
டொழியப் புகழ்பெற் றிடுவோனே
செயசித் திரமுத் தமிழுற் பவநற்
செபமுற் பொருளுற் றருள்வாழ்வே
சிவதைப் பதிரத் தினவெற் பதனிற்
றிகழ்மெய்க் குமரப் பெருமாளே.

2. பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

## (5) இரத்தினகிரி உலா

இரத்தினகிரியைப்பற்றிப் பாடப்பெற்ற நூல். 408 கண்ணிகளைக் கொண்டது. ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. உலா என்பது தமிழுக்குரிய பலவகைப் பிரபந்தங்களில் ஒன்று. தலைவன் தேரில் உலா (பவனி) வரும்போது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் முதலிய பல பருவப்பெண்கள் தலைவனைக்கண்டு காதல் கொள்வதாகக் கற்பித்துக் கலிவெண்பாவால் பாடப்பெறுவது. இந்நூலில் மலையின் சிறப்பு, மூர்த்தியின் பெருமை, பிறசரித்திரக் குறிப்புக்கள் முதலியன சொல்லப்பட்டுள்ளன.

சீருலா வீதிச் சிவாய நக ராள்வார்தம்
பேருலா நாளும் பிறங்கவே—நேரலார்
ஆர்க்குஞ் சரமுகனே ரானவரிவரிசேர்
கார்க்குஞ் சரமுகனே காப்பு.

---

சீராரும் ஞானச்சிறப்பின் கதிர்படைத்த
பாராரும் தெய்வ பராபரமாய்—யாராலும்

காணுவடிவமதாய்க் காண்பானும் காட்சியுமாய்ப்
பூணுபரணப் பொருளேயாய்ச்—சேணுகி

ஆனந்தமாகி யறிவர்யளவுபடாத்
தானந்தமில்லாத்தனிமுதலாய்—வானந்த

மில்லா நிலையத்தெழுந்து பரிபூரணத்தின்
சொல்லாயகண்ட துரியமதாய்—எல்லாமாங்

காலத்தினெல்லை கடந்து பரநாதத்தின்
மூலத்தே மன்னு முதற்பொருளாய்—ஞாலத்துள்

ஓங்காரமாகி உணர்வாய் உணர்தற்கு
நீங்காதசோதி நிருமலமாய்ப்—பாங்கான

தற்பரமாய்வேறுய்ச் சகளமதாய் நிட்களமாய்ச்
சிற்பரனேயான சிவபெருமான்.

ஃ ஃ ஃ ஃ ஃ

* கையதனுல் மாணிக்கங் காமித்தெடுக்கவரும்
வெய்யவனு மாரியன்முன் மேவியிதை—ஐயநீ

வேண்டினேயேற் பொன்னியறல் மிக்க குட
மாயிரந்தான்
ஈண்டு தருதியே லீவமென—ஆண்டவன்போய்க்

கொண்டுவருமாயிரத்தைக் கூறுந்தொள்ளாயிரமாய்க்
கண்டு பொசிவாசிக் கணக்குரைத்தே—மிண்டுகள்
போல்

பன்னுநூறுங் குடத்திற்பத்திலதாய் வாங்கியதில்
உன்னுகுடமொன்றி லுழக்கிலதாய்—அன்னதுநீ

தாவெனவே உள்ளந்தரியாமல் வாளுருவி
யாவெனவே வெட்டுமவனெதிரே—சேவினேடு

காணவந்து முத்திக் கபாடந்திறந்தருளிப்
பூணு முடித்தழும்பு பூண்டபிரான்—

ஃ ஃ ஃ ஃ ஃ

---

* இதுமுதல் ஆறு கண்ணிகளில் ஆரிய அரசனுடைய வரலாறு கூறப்பட்டுள்ளது.

கன்று துர்க்கை நாகங் கடவுளர்கோன் காலிரவி
மின்னிடிக்கொள் மாமுனிவர் வேண்டவே—
கின்னரார்தம்

மாதர் ககனமடவார் திசைமடவார்
பூதல மின்னரும் புடைசூழ—ஆதி

விரகேசன் தென்சிவதை வீதிதொறும் தேர்மேல்
உரகேசன் போந்தான் உலா.

## (6) வாட்போக்கிக் கலம்பகம்

திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீமீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றியது. 100 பாடல்களை உடையது. கலம்பகம் என்பது புயவகுப்பு முதலிய 18 உறுப்புக்களும் பொருந்தியும், பலவகைப் பாக்களும், பா இனங்களும் கலந்தும், ஓர் பாட்டின் அந்தமும் அடுத்த பாட்டின் ஆதியும் தொடுத்துவரப் பாடுவது. இதுவும் தமிழுக்குரிய பிரபந்தங்களுள் ஒன்று.

1. அடித்தழும்பு புறத்திருக்க ஆரியகோ மகன் கொடுத்த
முடித்தழும்புங் கொண்டனைவெம் முலைத்தழும்பிற்
சீரியதோ!

2. விரைகமழ்பூங் கொன்றைமுடி வேய்ந்துவாட் போக்கி
வரைகமழ வீற்றிருக்கும் வள்ளல்—உரைகமழ்பொன்
பாத கமலம் படுமுடியார்க் கப்பொழுதே
பாத கமலம் படும்.

3. குறிபடுபல் மணிவிற்றீர் மாதுலனாய் வழக்குரைத்தீர்
கூடல்மேவி
நெறிபடுமற் றவையோரார் ஆரியநீர்ச் சிறுகுறையும்
நிரப்புகென்று
பறிபடுவே ணிப்புனல்வாட் போக்கியீர்
பெருங்கணக்குப் பார்த்து நின்றீர்
செறிபடுபல் கிளைவணிகர் நுங்கூட்டுக் கிசைந்தனரச்
சிறப்பொன் றோர்ந்தே.

4. ஆர்கொண்ட செஞ்சடையீர் வணிகருணீர் ஒருவரெனற்
கையமில்லை
சூர்கொண்ட சூலமழுக் கொண்டிருந்தும் மண்டுசினங்
கொடுதுரத்திப்
போர்கொண்ட ஆரியர்கோன் வாள்கொண்டு
வெட்டிடவும் பொறுத்துக்கொண்டீர்
சீர்கொண்ட இதனால்மற் றவர்கொடுக்கும்
பொருட்பங்கும் சிதைதராதே.

5 ஆனவனு காதவனென் றன்புடையார் பாலாயா
ஞனவனு காதவனே நானாக உட்குறிக்குங்
கோனவன்மு னாகியல்லாக் கோமான்மா ணிக்கமலை
வானவன்சீர் பாடாதார் வாயென்ன வாயே
மலைக்கொழுந்தென் றுரையாதார் வாயென்ன வாயே.

---

வாழி சிவாயநகர் வாட்போக்கி யார்வாழி
வாழிமா ணிக்க மலைவாழி—ஊழியினும்
தொண்டரெலாம் வாழி சுருதி சிவாகமமும்
மண்டலமும் வாழி மகிழ்ந்து. (உலா)

---

NADU ARCHIVES LIBRARY
MADRAS
112904

திருச்சிராப்பள்ளி
யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்,
திருச்சி.